# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 26 செவ்வாய்க்கிழமை 12.11.2024 கதிர் 415







# தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி நடைமுறைகள் குறித்து ஆணையாளர் விளக்கம்!



**கொழும்பு, நவ.12**

**நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் அறிவிக்கப்பட்டபடி தேர்தல் வாக்களிப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. மேலும், தபால் மூல வாக்குகளை எண்ணும் பணிகள் பிற்பகல் 4.55 மணிக்கும், வாக்குகள் எண்ணும் பணிகள், வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்ட பின்னர் இரவு 7.15 மணிக்கும் ஆரம்பிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர். எம்.ஏ. எல். ரத்னாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும் விசேட ஊடக சந்திப்பொன்று இன்று காலை இடம்பெற்றது.

இதன்போது, தேர்தல் ஏற்பாடுகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர். எம்.ஏ. எல். ரத்னாயக்க மேலும் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:

**1. வாக்காளர் அட்டைகள்**

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள வாக்காளர்கள் அனைவருக்குமான வாக்காளர் அட்டைகள் தபால் மூலமாக அனுப் பப்பட்டுள்ளன. இதுவரை வாக்காளர் அட்டை கிடைக்கப்பெறாதோர் தத்தமது தபால் நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். தபால் நிலையங்களில் வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோக பூர்வ இணையத் தளத்தில் இருந்து அவற்றைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**2. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல்.**

வாக்களிக்கச் செல்லும் அனைவரும் வாக்களிப்பு நிலையத்தில் தமது ஆள் அடையாளத்

2➤

## தேர்தல் விதி மீறல் குற்றச்சாட்டில் பொலீஸ் பொறுப்பதிகாரி கைது !

கொழும்பு, நவ. 12

வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ், பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினால்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் விதிமுறைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கத் தவறியமை மற்றும் வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் கொச்சிக்கடைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியே நேற்று திங்கட்கிழமை கொழும்பு தெற்கு வலய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 03 ஆம் திகதி இரவு தேர்தல் போஸடர்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸ் உப பரிசோதகர் ஒருவரின் தலைமையிலான குழுவினரைக் கடமை செய்ய விடாமல் அச்சுறுத்தியதுடன், வேட்பாளர் ஒருவரது போஸ்டர்களை மட்டும் அப்புறப்படுத்த விடாமல் தடுத்தமை தொடர்பில் தேர்தல் திணைக்களம் பொலீஸ்திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தியதை அடுத்தே கொச்சிக்கடை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்றிரவு கைது செய்யப பட்டுள்ளார் எனப் பொலீஸ் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-07)

## வடக்கு – கிழக்கில் 28 ஆசனங்களைப் பெற இரண்டாயிரத்து நூற்று நான்கு பேர் போட்டி!

யாழ்ப்பாணம், நவ.12

நாளை மறுதினம், வியாழக்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்து 28 ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2 ஆயிரத்து 104 பேர் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

இவர்களில் இருந்து 28 பேரைத் தெரிவு செய்வதற்காக 22 இலட்சத்து 22 ஆயிரத்து 311 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். தேர்தல் மாவட்ட ரீதியாக ஒதுக்கப்படும் ஆசனங்கள், வேட்பாளர்கள், வாக்காளர்களின் விவரம் வருமாறு :

வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில்6ஆசனங்களுக்காக 23 அரசியல் கட்சிகள் , 21 சுயேச்சைக் குழுக்களின் சார பாக 396 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன் 5 இலட்சத்து 93 ஆயிரத்து 187 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 24 அரசியல் கட்சிகள் , 27 சுயேச்சைக் குழுக்களின் சார்பாக 459 வேட்பாளர்கள் போட்டியிடுவ துடன் 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 5 ஆசனங்களுக்காக 27 அரசியல் கட்சிகள் , 22 சுயேச்சைக் குழுக்களின் சார் பாக 392 வேட்பாளர்கள் போட்டியிடுவ துடன் 4 இலட்சத்து 49 ஆயி ரத்து 686 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

திகாமடுல்ல மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக 22 அரசியல் கட்சிகள் , 42 சுயேச்சைக் குழுக்களின் சார்பாக 640 வேட்பாளர்கள் போட்டியிடுவ துடன் 5 இலட்சத்து 55 ஆயி ரத்து 432 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 4 ஆசனங்களுக்காக 17 அரசியல் கட்சிகள் , 14 சுயேச்சைக் குழுக்களின் சார்பாக 217 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

(ஐ-03)




## கொழும்பு – மன்னார் புகையிரத சேவை மீள ஆரம்பம்!

கொழும்பு, நவ.12

மஹறவ முதல் அநுராதபுரம் வரையிலான புகையிரத மார்க்கத் திருத்தப் பணிகள் காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மன்னாருக்கான புகையிரத சேவைகள் 11 மாத காலத்தின் பின் இன்று மாலை மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

இன்று முதல் தினமும் பிற்பகல் 4.15 க்கு கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து சேவையை ஆரம்பிக்கும்

2➤

## தேர்கல் கடமைகளுக்கு 64 ஆயிரம் பொலீஸார்!

கொழும்பு, நவ. 12

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் சுமார் 64 ஆயிரம் பொலீஸார் இன்று முதல் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 13 ஆயிரத்து 314 தொகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 13 ஆயிரத்து 383 வாக்களிப்பு நிலையங்களிலும் கடமையாற்றுவதற்கென 64 ஆயிரம் பொலீஸாருக்குப் பணி ஒதுக்கப்பட்டுள்ளது.



இவர்கள் இன்று முதல் தேர்தல் தினத்தன்றும், மறுநாளும் காவல் கடமையில் ஈடுபடுவர். தேவை ஏற்படின் தேர்தலை அடுத்துவரும் சில நாள்களும் அவர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர் என்றும், பொலீஸாருக்கு மேலதிகமாக மூவாயிரத்து இருநூறு பொலீஸ் விசேட அதிரடிப்படையினரும், 12 ஆயிரத்து 227 சிவில் பாதுகாப்புத் திணைக்கள வீரர்களும் கடமையில் ஈடுபடத்தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், பொலீஸார் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதனால், வழமையான சில முக்கிய இடங்களின் பாதுகாப்புக்காக 11 ஆயிரம் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தடவுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-09)

# பயணப் பொதியில் கசிப்பு: மடக்கிப் பிடித்த பொலீஸார்!



கிளிநொச்சி, நவ. 12

விசுவமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சூட்சுமமான 26 லீற்றர் கசிப்பைக் முறையில் கடத்திச் செல்ல முற்பட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கொண்டு சென்ற 26 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, விசுவமடுவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேஷரூந்தொன்றில் கசிப்பு கடத்தப்படுவதாகக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் தர்மபுரம் பொலீஸார் பேஷரூந்தை மறித்துச் சோதனையிட்டுள்ளனர். இந்த அதிரடி நடவடிக்கையின் போது, பயணப் பைகளினுள் சூட்சுமமான முறையில் கொண்டு செல்லப்பட்ட சுமார் 26 லீற்றர் கசிப்பைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். கசிப்பைத் தன்வசம் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரையும், கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருள்களையும் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ள தர்மபுரம் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-ரி)

# “சீத்துவக்கேடு” நூல் வெளியீடு







யாழ்ப்பாணம், நவ.11

காரைக்கவி கந்தையா பத்மானந்தன் எழுதிய சீத்துவக்கேடு என்ற தொலைந்துவிட்ட வாழ்வியல் நினைவுகள் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு நூல் அறிமுகவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை, நல்லை ஆதீன மண்டபத்தில் இடம் பெற்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனும்,கௌரவ விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவனும் சிறப்பு விருந்தினர்களாக ஜீவநதி சஞ்சிகை ஆசிரியர் க. பரணீதரன், எங்கட புத்தகங்கள் குழும நிறுவுநர் கு. வசீகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் வாழ்த்துரையை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் , முகப்புரையைப் பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரனும், நயவுரையை கவிஞர் சோ. பத்மநாதனும் நிகழ்த்தினர். முதற்பிரதியை மூத்த ஆசிரியர் பராசக்தி கந்தையா வெளியிட்டு வைக்க ஆளுநர் நா. வேதநாயகன் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் காரைக்கவி சார்பில் பதிப்பு துறையில் சாதனை படைத்து வரும் ஜீவநதி பதிப்பாசிரியர் கலாமணி பரணீதரனுக்கு “பதிப்புச் சித்தர்” என்ற பட்டதை ஆளுநர் நா. வேதநாயகன் வழங்கிக் கௌரவித்தார். (ஐ)

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புகையிரதம் இரவு 10.15க்கு தலைமன்னாரை சென்றடையும் என்றும், அதிகாலை 04.15 க்குத் தலைமன்னாரிலிருந்து சேவையை ஆரம்பிக்கும் புகையிரதம் முற்பகல் 10.15க்கு கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடையும் எனவும் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## தேர்தலுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ஆளடையாளத்தை நிஷரூபிப்பதற்கு முக்கியமான ஆவணமாகும்.

தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஓய்வூதியர் அடையாள அட்டை, பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் முதியோர் அடையாள அட்டை, ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பிக்குகள் மற்றும் சமயக் குருமாருக்கான அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை விவரங்களை உறுதிப்படுத்தி ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடிதம், தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை அல்லது தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் வாக்களிக்கலாம்.

**3. வாக்களிப்பு நிலையத்தில் படம் பிடிக்கத் தடை**

வாக்களிப்பு நிலையத்தினுள் அல்லது அதன் சுற்றயல் பகுதிகளினுள் படப்பிடிப்பை மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. வாக்குச்சீட்டை அல்லது வாக்களிக்கும்செயற்பாடுகளை வீடியோ அல்லது போட்டோ எடுப்பது குற்றமாகும். ஆபத்தை ஏற்படுத்தும் கருவிகள் மற்றும் ஆயுதங்களை வாக்களிப்பு நிலையத்தினுள் எடுத்துச் செல்ல முடியாது. அத்தகையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அங்கு கடமையிலிருக்கும் பாதுகாப்பு அலுவலர்களுக்கு உரியதாகும்.

**4. வாக்களிப்பு விடுமுறை**

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் வாக்களிப்பதற்குச் செல்வதற்கு வசதியாக அவர்களது வாக்களிப்பு நிலையத்துக்கும், வேலைத் தளத்துக்கும் இடையிலான தூரத்தின் அடிப்படையில் விடுமுறை வழங்குவதற்கான சுற்றுநிருபம் தேர்ததல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் விடுமுறை வழங்குவதற்கு அவ்வத் தொழில் தருணர்கள் இணங்கியுள்ளனர்.

**5. பகிரங்கமாகக் கூடுவதற்குத் தடை**

தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நடவடிக்கைகளை நேரடியாகப் பார்ப்பதற்கோ, வாக்களிப்பு நிலையச் சுற்றயல்களில் கூட்டமாகக் கூடுவதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது. வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கருகில் கூடுவதும், வெடி கொழுத்தி ஆராவாரம் செய்வதும் தண்டணைக்குரிய குற்றமாகும்.

அன்றைய தினம் காலை 7.00 மணி முதல் 4.00 வரை வாக்களிப்பு இடம்பெறும். தபால் மூல வாக்குகளை எண்ணும் பணிகள் பிற்பகல் 4.55 மணிக்கும், வாக்குகள் எண்ணும் பணிகள், வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்ட பின்னர் இரவு 7.15 மணிக்கும் ஆரம்பிக்கப்படும். (ஐ)

# தரமற்ற மருந்து விநியோகம் தொடர்பில் வாக்குமூலம் பெற நீதிமன்றம் அனுமதி!



கொழும்பு, நவ. 12

அரசாங்க வைத்தியசாலைகளுக்குத் தரமற்ற மருந்துகளை விநியோகித்தமை தொடர்பில்தாக்கல்செய்யப்பட்ட வழக்குக்காக, அப்போதை அமைச்சரவையில் அங்கம் வகித்த 18 அமைச்சர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்தின் அடிப்படையில் தரமற்ற மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதியளித்த அப்போதைய அமைச்சரவையில் அங்கம் வகித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் அமைச்சர்களான டிரான் அலஸ், மஹிந்த அமரவீர, விஜயதாச ராஜபக்ஷ, ஹரின் பெர்னாண்டோ, ரொஷான் ரணசிங்க, நிமல் சிறிபால டி சில்வா உட்பட 18 பேரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு உத்தரவு ஒன்றை வெளியிடுமாறு சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, மாளிகாகந்த நீதிமன்றில் கோரியதையடுத்து, அதற்கு அனுமதியளித்து நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ஐ-05)




இலங்கை என்பியில் சங்கத்தின் தலைவராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் தயாசிவம் கோபிசங்கர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச சத்திர சிகிச்சையாளர் சங்கத்தின் இலங்கைக்கான பிரிவுக்கான முதலாவது தலைவராகவும் வைத்திய நிபுணர் ரி. கோபிசங்கர் செயற்படுகிறார்.

# றிசாட் – மஸ்தான் ஆதரவாளர்களிடையே முறுகல்: வாகன தொடரணி மீது தாக்குதல்




வவுனியா, நவ. 12

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பிரசாரக் கூட்டம் இடம்பெற்ற பகுதியில் ஏற்பட்ட குழப்ப நிலையில் இருவர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும், அவரது ஆதரவாளர்களும் பயணித்த வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் பிரதான வீதிக்கு அருகில் நேற்று மாலை 8 மணியளவில் காதர் மஸ்தானின் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த றிசாட் பதியுதீன் அவர்களின் ஆதரவாளர்கள் பொதுக்கூட்டத்தை பார்த்து கூச்சலிட்டுச் சென்றிருந்தனர்.

சற்று நேரத்தில் குறித்த மோட்டார் சைக்கிள்களுக்கு பின்னால் முன்னாள் அமைச்சர் றிசாட் பதியூதீனும் அவரது ஆதரவாளர்களும் பயணித்த வாகனத் தொடரணிகள், கூட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த பகுதிக்கு அருகே உள்ள பிரதான வீதி ஊடாக பயணித்துள்ளது.

இதன்போது, இரு தரப்பு ஆதரவாளர்களுக்கும் இடையில் குழப்பநிலை ஏற்ப்பட்டதுடன் சற்று நேரத்தில் அது கலவரமாக மாறி றிசாட் பதியூதீன் பயணித்த வாகனம் உட்பட வாகனத் தொடரணி மீது மக்கள் கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

றிசாட் பதியுதீன் வாகனத்திற்குள் இருந்த நிலையில் அவரது வாகன கண்ணாடி அடித்து நொருக்கப்பட்டதுடன், அவரது ஆதரவாளர்களின் வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலையடுத்து வாகனத் தொடரணி அப்பகுதியிலிருந்து சென்றிருந்த நிலையில், சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார்நிலமையைகட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையினை எடுத்திருந்தனர்.

கலவரநிலைமை கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர் காதர் மஸ்தானின் கூட்டம் பொலிஸாரின் பாதுகாப்புடன் தொடர்ந்து இடம்பெற்றிருந்தது.

சம்பவத்தில் காயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இச்சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் சூடுவெந்தபுலவு பகுதியில் இடம்பெற்ற காதர் மஸ்தானின் பொதுக்கூட்டத்தில் இருதரப்பு ஆதரவாளர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்ப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)





# எங்கெங்கும் அரசியல்

இன்று நம் வாழ்க்கையில் நாம் விரும்புகிறோமோ இல்லையோ ‘அரசியல்’ நம்மை விரும்பி பிடித்து கொள்கிறது. நான் எந்த வம்புக்கும் செல்ல மாட்டேன், ‘நானுண்டு என் வேலையுண்டு’ என்று பதவிசாக சொல்லி கொள்பவர்கள் கூட ஏதோ ஒரு வகை ‘அரசியல்’ என்னும் சூறாவளியால் சிக்கி கொள்ளத்தான் வேண்டும்.

‘அரசியல்’ என்றவுடன் நீங்கள் தற்போதைய அரசியல்வாதிகள் செய்யும் கூத்தை மட்டும் நினைத்து கொள்ளாதீர்கள். அவர்கள் அத்தகைய ‘கூத்தை’ அடித்தால்தான் நம்மை ஆட்சி செய்யும் அதிகாரத்தை கைப்பற்ற முடியும். அதாவது நாமே அவர்களின் ‘கூத்தை’ பார்த்து மயங்கி (பல வித தந்திரங்கள்) அவர்களை “இந்தாப்பா நீதான் எங்களை ஆள சரியான ஆள்” என்று தேர்ந்தெடுத்து விடுவோம்” என்பதாக அவர்கள் நம்புகிறார்கள்.

நம்மை போன்ற ஆட்கள் அந்தளவுக்கு எல்லாம் அரசியல் செய்து ஆட்சியை பிடிக்க அல்லாட போவதில்லை, என்றாலும் நாம் அன்றாடம் சந்திக்கும் அரசியல் என்பது இதோடு ஒத்து போனாலும், அன்றாட வாழ்க்கையில் சமுதாய சிக்கலில் சிக்கி கொள்ளும் ஒவ்வொருவரும் இந்த அரசியலில் இருந்து தப்பி பிழைத்தால் போதும் என்னும் நம்பிக்கையில் வெளி வர போராடுகிறார்கள்.

ஒரு நிறுவனத்தில் உத்தியோகம் பார்க்கிறீர்கள் என்று வைத்து கொள்ளுங்கள், அங்கு நிலவாத அரசியலா? ஜுனியர்,சீனியர், அடுத்து சொந்த சாதிக்காரன், அல்லது நண்பன், இப்படி எண்ணற்ற எண்ணங்கள் ஒவ்வொருவரின் மனதுக்குள்ளும் தோன்றி மற்றவனை பணி செய்ய விடாமல், அல்லது முன்னேற விடாமல் அல்லோ களப்படுத்தி விடுகிறது. இது தனியார் துறை என்றாலும் அரசு துறை என்றாலும் எல்லாம் ஒன்றுதான், என்ன ஒரு விசயம்,தனியார் துறை என்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனே கல்தா கொடுக்கப்படுகிறது, அரசு என்றால் பணியாளர் மாற்றப்படுகிறார்.

பணி செய்யும் இடம் உதாரணமாக சொல்லப்பட்டதே தவிர உண்மையில் “எங்கெங்கு நோக்கிடும் அரசியல்” இதுதான் உண்மை.

வீட்டில் ஒன்றாக வசிப்பவர்களிடம் கூட அவர்கள் அறியாமல் ஒவ்வொரு வருக்குள்ளும் அரசியல் மனப்பான்மை இருந்து கொண்டுதான் இருக்கிறது.

இங்கு சமுதாய அரசியல் என்பது குழுக்களாகவும் செயல்படும், தனியாக சிக்கி கொண்டாலும் அவர்களை உண்டு இல்லை என்று செய்தும் விடும்.

அப்படியானால் அரசியல் என்பதன் அர்த்தம் என்ன? பிறரை கவிழ்ப்பது, காட்டி கொடுப்பது, நம்ப வைத்து கை கழுவுவது, இப்படி பட்ட காரியங்களைத்தான் அரசியல் என்கிறோமா?

முழுவதுமாக சொல்வதானால் ‘அரசியல் என்பது தவறான போக்கு முறை’ என்று எடுத்து கொள்ளலாமா?

அப்படியானால் இன்றைய காலகட்டத்து விளம்பரங்களை எப்படி எடுத்து கொள்ளலாம்? அவைகளில் எத்தகைய உண்மைகள் இருக்கின்றன? அப்படி அவர்கள் விளம்பரப்படுத்தும் பொருட்களின் உண்மை தன்மையை நுகர்வோரிடம் சொல்லி வாங்க சொன்னால் நுகர்வோர்தான் வாங்குவார்களா? அல்லது இதை நம்புவார்களா?

அதனால் ஒவ்வொரு தயாரிப்பும் அதிகபட்ச உபயோகப்படும் பொருளாக காட்டப்பட்டு விளம்பரம் செய்யப்படுகின்றன. ஒரு பொருளுக்கே இத்தகைய செயல்பாடுகள் தேவைப்படும்போது நம்மை அதிகாரம் செய்யும் பதவிக்கு வர நினைக்கும் அரசியல்வாதிகள் செய்யும் கூத்துக்கள் சில நேரங்களில் நியாயமாகத்தான் தோன்றுகிறது. அதே போல் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் வெளிப்படுத்தும் அரசியல் மனப்பான்மை அவர்களை எப்படியாவது முன் வரிசைக்கு கொண்டு வர வைக்க செய்யும் செயல்தானே..!

இத்தகைய போக்கினால் இன்று பெரும் பெரும் தலைவர்களாக செயல்பட்டு கொண்டிருக்கும் அரசியல்வாதிகளே உண்மைக்கு மாறான கருத்துக்களை சர்வ சாதாரணமாக பொது வெளியில் பேசுகிறார்கள்.

அக்கம் பக்கம் வசித்து கொண்டிருக்கும் மக்கள் கூட சில மனஸ்தாபங்களினால் இத்தகைய அரசியல் தந்திரங்களில் மாட்டி கொள்வதுண்டு. இந்த வீட்டுக்காரருக்கும் எதிர்புறத்து வீட்டுக்காரருக்கும் ஏதேனும் ஒரு வகை புகைச்சல் என்றால் இந்த இரு வீட்டுக்காரர்களின் அருகில் இருக்கும் வீட்டுக்காரர்களின் நிலைமை எப்படி இருக்கும்? இவர்கள் அவர்களிடம் பேசினால் குற்றம், இவர்களிடம் பேசினால் குற்றம். இப்படி ஒவ்வொரு தடவையும் சிக்கலில் மாட்டி கொள்கிறார்கள்.

இந்த விதமான போக்கு எல்லா இடங்களிலும், எல்லாரிடத்தும் தனிப்பட்ட ஆண், பெண் பேதமற்று நிறைந்திருக்கிறது. வாழ்க்கை என்பது இப்படித்தானோ..! ஒருவரை சரிகட்டி, மற்றவரை சரிகட்டி, இப்படியேதான் போய் கொண்டிருக்கிறது.

மாமியார் மருமகள் அல்லது மருமகன், மாமனார் அல்லது மருமகள், ஏன் தந்தை மகன் உறவு கூட ஏதோ ஒரு சமரசத்தின் அடிப்படையில்தான் சென்று கொண்டிருக்கிறது. கணவன் மனைவி உறவுகளுக்குள் கூட ஒரு வித சமாளிப்பு தன்மையுடன்தான் அவர்களுடனான உறவுகள் மேம்பட்டு கொண்டிருக்கின்றன.

சரி சமுதாய மக்களிடம்தான் இப்படி இருக்கிறது என நினைத்தால், ஊருக்கு ஊர் மாநிலங்களுக்கு மாநிலம், நாட்டுக்கு நாடு, எல்லாம் இப்படித்தான் இருக்கின்றன. இவை அனைத்தையும் தாண்டி வருவது என்றால் ஏதேனும் ஒரு சமரசம் ஏற்பட்டால்தான் அவர்களின் அல்லது அந்த நாடுகளின் சிக்கல் தீர்க்கப்படுகிறது. ஆனால் அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த “சமரசம்” வேறொரு அரசியல் செய்கைக்கு வழி காட்டிவிடுகிறது. ஒன்று தீர்ந்தால் மற்றொன்று முளைக்கிறது. அப்படி முளைத்து கொண்டே இருப்பதால்தான் சமுதாயத்தில் நாம் எல்லோரும் வாழ்வதற்காக ஓடி கொண்டிருக்கும் தொடர் ஓட்டபந்தயம்.

இதனால்தான் “அரசியல்” என்பது கலை, மருத்துவம், சட்டம், அறிவியல் இவைகளை போல அரசியல் என்பது தனிப்பட்ட கல்வி திறனாகவே ஆகி விட்டது. அப்படியானால் என்ன அர்த்தம்?

அரசியலை கற்று கொண்டால் இந்த சமுதாயத்தில் எப்படி வாழ வேண்டுமென்று தெரிந்து விடும் என்பது உண்மைதானே.!



# அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடவும்



கொழும்பு, நவ. 12

இந்த நாட்களில் சிறுவர்களுக்கு காய்ச்சல் அதிகரித்து வருவதாக ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த காய்ச்சல் மூன்று நாட்களுக்கு நீடித்தால் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் விசேட வைத்திய நிபுணர் அறிவுறுத்தியுள்ளார்.

“கடந்த சில நாட்களாக குழந்தைகளிடையே காய்ச்சல் போக்கு அதிகரித்துள்ளதாகவும், வைரஸ் காய்ச்சல், இருமலுடன் கூடிய காய்ச்சல், சளி என்பன நோய் அறிகுறிகளாக காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இருமல், சளி, காய்ச்சல், உடல் வலி, வாந்தி மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், உடனடியாக இரத்தப் பரிசோதனை செய்துகொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக டெங்கு நோய் குறித்து கவனமாக இருக்குமாறும், டெங்கு கொடிய நோய் என்பதால், உயிரிழக்கும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ)







மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த இரத்ததான நிகழ்வு நேற்று நடைபெற்றது. விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள் , கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், பாதுகாப்பு படையினர், பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட இருநூறுக்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தனர். (படங்கள் வி.ரி.சகாதேவராஜா)



# சொகுசு வாகனத்தை ஒப்படைத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

கொழும்பு, நவ. 12

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க பயன்படுத்திய கறுப்பு நிற வி 8 ரக சொகுசு வாகனத்தைக் குற்றப்புலனாய்வு திணைக் களத்தினர் பொறுப்பேற்று நீதிமன்றத்திடம் கையளிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தர விட்டுள்ளார்.



இது தொடர்பாகக் குற்றப் புலனாய்வு திணைக்களம் தாக்கல் செய்த மனு மீதான ஆராய்வின் போதே நேற்றையதினம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சொகுசு ரக வாகனத்தை மேலதிக பரி சோதனைக்காக அரச இர சாயன பகுப் பாய்வுக்கு அனுப்புமாறு நீதவான் முன்னதாக உத்தரவிட்டிருந்தார்.

இவேளை, மேலதிக விசாரணைகளுக்காக தனது வாகனத்தை உயர்நீதிமன்றில் ஒப்படைத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அரச ஊழல் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளதால் வாகனத்தை ஒப்படைக்குமாறு தம்மிடம் கோரப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், டொயோட்டா நிறுவனத்திடம் இருந்து வாகனம் தொடர்பான அறிக்கை தேவை என நீதிமன்றில் அரச ஊழல் தடுப்புப்பிரிவினர் தெரிவித்திருந்தனர்.

அதன்படி, தாம் வாகனத்தை ஒப்படைக்க வேண்டியிருந்தது என்று சேனசிங்க தெரிவித்துள்ளார். இது அரசியல் பழிவாங்கலைத் தவிர வேறில்லை என்று குறிப்பிட்ட அவர், கடந்த வாரமே, அரச பகுப்பாய்வு ஆய்வாளர் தமது வாகனத்தை தவறானது அல்ல என்று அங்கீகரித்திருந்தார்.

இருப்பினும், அதிகாரிகள் இன்னும் விசாரணை நடத்த விரும்புகிறார்கள் என்று சுஜீவ சேனசிங்க குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மதுபானம் அருந்திய இருவர் மரணம்

வவுனியா, நவ. 12

காலி, பிட்டிகல பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் அருந்தி இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பிட்டிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரக்கொடை பகுதியில் வசிக்கும் பத்மகுமார என்ற நபரே தனது வீட்டிற்கு சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுபான போத்தல் ஒன்றை கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த மதுபானத்தை தனது நண்பர்களும் சேர்ந்து அருந்தியுள்ளனர்.

நேற்று காலை வேளையில் அவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டதால் உடனடியாக எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் 76 வயதான ஹரிசன் விஜேரத்ன மற்றும் 60 வயதான தர்மபால ஆகிய இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இருவரும் அதே பகுதியில் வசிப்பவர்கள் எனவும் விவசாயம் மற்றும் சாரதிகளாக தொழில் செய்து வருவதும் பொலிஸார் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மதுபான போத்தலை கொண்டு வந்த நபரும் மற்றைய நபரும் எல்பிட்டிய மற்றும் கராப்பிட்டிய வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பிட்டிகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிடிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)



# உயர்தரப் பரீட்சை நடத்துவது தொடர்பில் வெளியான முக்கிய தகவல்




கொழும்பு, நவ. 12

கல்விபொதுதாராதரஉயர்தரபாடத்திட்டம் நிறைவு பெறாத காரணத்தால் உயர்தர பரீட்சையை ஒருமாத காலத்துக்கு பிற்போடுமாறு முன்னாள் பாராளுமன்ற உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள சர்வஜன சக்தி கட்சியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொவிட் பெருந்தொற்று மற்றும் பொருளாதார தாக்கம் ஆகிய காரணிகளால் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் மிக மோசமாகபாதிக்கப்பட்டு தேசிய பரீட்சைகளை நடத்தும் காலம் பிற் போனது.


ஆசிரியர்களின் தொழிற் சங்க போராட்டங்களினால் பாடத்திட்டங்களை நிறைவு செய்வதில் தாமதம் நிலவியது.

கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சையை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக் களம் தீர்மானித்துள்ளது.

உயர்தர பரீட்சை பாடத்திட்டம் நிறைவு செய்யாத காரணத்தால் உயர்தர பரீட்சையை பிற்போடுமாறு மாணவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பரீட்சையாக உயர்தர பரீட்சை கருதப்படுகிறது.

ஆகவே மாணவர்களின் நியாயமான கோரிக்கையை கருத்திற்கொண்டு உயர்தர பரீட்சையைஒருமாதகாலத்துக்குஅரசாங்கம் பிற்போட வேண்டும் என்றார். (ஐ)



## யாழில் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 12

மானிப்பாய் - கைதடி பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் அரசடை வீதி வட்டுத்தெற்கு வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வீதியில் சென்ற இன்னொரு மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை முந்திச் செல்வதற்கு முயற்சித்தார்.

இதன் போது மோட்டார் சைக்கிளுடனும் மோதி, கிளுவை மரத்துடனும் மோதி விபத்து சம்பவத்துள்ளது. உயிரிழந்தவரின் சடலமானது உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்லதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)




# மியான்மாரின் இணையக் குற்றங்களில் தொடர்ந்தும் இணைக்கப்படும் இலங்கையர்கள்

கொழும்பு, நவ. 12

மியான்மாரில் உள்ள இணையக் குற்ற முகாம்களுக்கு தொடர்ந்தும் இலங்கையர்கள் அனுப்பப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை நாட்டவர்கள், குறிப்பாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் வசிப்பவர்கள், அதிலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உள்ளவர்கள், அதிக சம்பளம் தரும் தொழில்கள் தொடர்பில் பொய்யாக வாக்களிக்கும் மனித கடத்தல்காரர்களால் குறிவைக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில், பாதிக்கப்பட்டவர்கள் துபாய் போன்ற இடங்களுக்கு நேர்காணலுக்காக அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இதன் பின்னர் அவர்கள் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்டு மியான்மாரில் சைபர் கிரைம் என்ற இணையக் குற்ற நடவடிக்கைகளில் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

இந்த சைபர் கிரைம் முகாம்களில் உள்ளவர்கள்,



மன மற்றும் கொடூரமான உடல் சித்திரவதைகளை எதிர்கொள்கின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும், சுற்றுலா விசாவில் வெளிநாட்டு தொழில்களை தவிர்க்குமாறும், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களை மட்டுமே பயன்படுத்துமாறும் தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இதற்கிடையில் இது தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க அவசர தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. 0112102570 மற்றும் 076 844 7700 என்ற இலக்கங்களே பணிக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், யொவவகளசடையமெயளூபஅயடை. உழஅ என்ற மின்னஞ்சலும் பணிக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் கடுமையான இரகசியத்தன்மையுடன் கையாளப்படும் என்று தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு உறுதியளித்துள்ளது . (ஐ)







## தேசிய அளவில் சாதித்த யாழ்.வட இந்து மாணவி

கொழும்பு, நவ. 12

தேசிய அளவிலான தனி நடனப் போட்டியில் முதலிடம் பெற்று வட இந்து மகளிர் கல்லூரி மாணவி சாதித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தனிநடன போட்டியில் யாழ்.வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி.வைஷாலி கரன் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்த தனி நடனப் போட்டி திருகோணமலை சண்முகா வித்தியாலயத்தில் யடியந்தோட்டை நடைபெற்றது.

இதில் பரதநாட்டிய தனி நடன போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த செல்வி வைஷாலி கரன் அவர்கள் முதல் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

## நடிகை புயூமி ஹன்சமாலி மற்றும் விரஞ்சித் கொழும்பு நீதிமன்றம் விடுத்த அதிரடி உத்தரவு!

கொழும்பு, நவ. 12

நடிகை பியூமி ஹன்சமாலி மற்றும் அவுரா லங்கா தலைவர் விரஞ்சித் தம்புகல ஆகியோரிடம் விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு கொழும்பு மேலதிக நீதவான் பண்டார இளங்கசிங்க இன்று உத்தரவிட்டுள்ளார்.

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 190ஆவது பிரிவின் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு வருவாய்ச் சட்டத்தின் 190வது பிரிவின் கீழ் ஏதேனும் குற்றங்கள் குறித்த இரு நபர்களால் செய்யப்பட்டனவா என்பதை விசாரணை மூலம் கண்டறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களின் வீடுகளிலும் ஆவணங்களை ஆய்வு செய்ய தேடுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் சோதனையின் போது அவர்கள் வீடுகளில் இருக்கவில்லை என்றும் வருவாய்த் துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

(ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2024 இல் வெளியிடப்பெற்றது.